
# ஒன்றிய அரசுக்கு ‘தி இந்து’ ஆங்கில நாளேடு கண்டனம்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

ஆளுநர்கள் ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட விசித்திர அதிகாரம் படைத்தவர்களாக உள்ளனர், ஆனால், அரசியலமைப்பு அவர்களுக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கவில்லை என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தை முடக்கும் அதிகாரம் அவர்களுக்கு இல்லவே இல்லை என்றும் ‘தி இந்து’ தலையங்கம் தெரிவித்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைப் பயன்படுத்தி இந்த சர்ச்சைகளுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம் என்றும், தேவைப்பட்டால், இந்த தீர்ப்புக்கு ஏற்ப அரசியல் சட்டத் திருத்தங்களைக் ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கலாம் என்றும் கருத்து தெரிவித்துள்ள இத்தலையங்கம், இதற்கு பதிலாக, ஏற்கனவே தீர்வு காணப்பட்ட விவகாரத்தை குடியரசுத்தலைவரின் கேள்விகள் மூலம் ஒன்றிய அரசு மீண்டும் எழுப்பி உள்ளதாகவும், அரசியல் சட்ட நிபுணர்கள் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளபடி, நீதிமன்றம் வழங்கும் கருத்து நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றாது என்றும் தெளிவுபடுத்தி உள்ளது.

குடியரசுத் தலைவரின் கேள்விகள் என்ற அசாதாரண பாதையை தேர்ந்தெடுப்பதன் மூலம், அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் வழங்காத அதிகாரங்களை ஆளுநர்கள் மூலம் பயன்படுத்துவதற்கான நோக்கத்தை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆளுநரின் அதிகாரம் குறித்து ஒருமித்த கருத்து ஏற்படுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கியதாகவும், தேவைப்பட்டால், முதலமைச் சர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டி, பிரச்சினைகளுக்காகான தீர்வுகளை ஒன்றிய அரசு தேட வேண்டும் என்றும் ‘தி இந்து’ தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


THE HINDU

Closing argument

The Presidential Reference seeks to undermine a settled question

The Union government has missed an opportunity to put a lid on the prolonged controversy over the arbitrary and the undemocratic use of power by unelected Governors. A Supreme Court judgment on April 8, 2025 clarified the constitutional position over the powers of the Governor and the President in giving assent to Bills passed by State Assemblies. A Division Bench of Justices J.B. Pardiwala and R. Mahadevan held that Tamil Nadu Governor R.N. Ravi's act of withholding 10 State Bills was “illegal” and “erroneous”. The well-reasoned judgment had outlined the possible courses of action for the Governor and the President once a Bill is before them for their assent, though the Constitution does not specify timelines. The judgment established long awaited and much required clarity on several questions. Now, the Centre, through a Presidential Reference, has brought up all these questions again to the Court, seeking its ‘opinion’ under Article 143. The power of Governors has been an extremely contentious question...

### கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை.மே.19-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், கனிம வளங்கள் மற்றும் கரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

புதுக் கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் நாளை (20.05.2025 செவ்வாய்க்கிழமை) மாலை, 3.30 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) திருமண மஹாலில் நடைபெறுகிறது. கழக முதன்மை செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என். நேரு கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் மாநில , மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர ,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் பணி சம்பந்தமாக

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை மே.19-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (20.05.2025 செவ்வாய்கிழமை) காலை 10 மணியளவில் புதுக்கோட்டை லேணா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. கூட்டத்தில் கழக முதன்மைக் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான கே.என். நேரு கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமை வகிக்கிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், எம்.எம். அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகாமீனாட்சிசுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என்.மணி, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வுகளில் தொகுதி பொறுப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணி களின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் பணி சம்பந்தமாக

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், வருகிற (21.05.2025 - புதன்கிழமை) மாலை 4 மணியளவில் வாலாஜாபாத் - காஞ்சிபுரம் சாலையில் உள்ள அறம்வளர்த்த நாயகி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச.இனியரசு, தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் டி.வி.கோகுலகண்ணன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தல் பணி சம்மந்தமாக ஆலோசனை வழங்க உள்ளார். சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், சூர்யா வெற்றிகொண்டான் (உத்திரமேரூர்) அருண்குமார். (காஞ்சிபுரம்) எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், (மதுராந்தகம்) எஸ்.டி.இசை (செய்யூர்) ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள், 2. கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பள்ளத்திவிடுதி கிராமத்தில், நேற்றையதினம் வீசிய சூரைக்காற்றால் பாதிப்படைந்துள்ள வாழை மரங்களை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினார்கள். உடன், இணை இயக்குநர் (வேளாண்மை) திருமதி.மு.சங்கரலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



திருச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே என் நேரு இரண்டு நாட்களாக நடைபெற்ற தொடர் நிகழ்ச்சியில், நீண்ட நாட்களாக நகர்ப்புற பகுதிகளில் குடியிருக்கும் 948 குடியிருப்பு வாசிகளுக்கு அவர்கள் இருந்த இடத்திற்கே நேரில் சென்று இலவச பட்டாக்களை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் ,மாநகராட்சி ஆணையாளர் சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன் ,மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, நகர பொறியாளர் சிவபாதம் மற்றும் துரைராஜ் மாத்தூர் கருப்பையா, டோல்கேட் சுப்பிரமணி, முத்து செல்வம் விஜயா ஜெயராஜ், காஜாமலை விஜய், கமால் முஸ்தபா, மோகன்தாஸ், நாகராஜ், இளங்கோ, மண்டலத் தலைவர் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி , கிராப்பட்டி செல்வம் ,கலைச்செல்வி , சாமிநாதன் , புஷ்பராஜ் குபேந்திரன்தில்லை மனோகரன், வ ண்ணை மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள், கவுன்சிலர்கள், வட்டச் செயலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ரயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பகவிநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 15-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி கேரளா மாநிலம், பாலக்காடு, மேற்கு கஞ்சிகோடு பகுதியில் நடைபெற்ற தென்னக ரயில்வே பொது மேலாளர் உடன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ரயில்வே ஆய்வுக் கூட்டத்தில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி கலந்து கொண்டு அமிர்தா எக்ஸ்பிரஸ் ராமேஸ்வரம் வரை நீட்டிப்பு, மதுரை கோவை முன்பதிவு இல்லா விரைவு வண்டி மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்க வேண்டும், பெங்களூர் கோவை உதயா எக்ஸ்பிரஸ் பொள்ளாச்சி வழியாக பாலக்காடு வரை நீட்டிப்பு, கிணத்துக்கடவு ரயில் நிலையத்தில் முன்பதிவு கவுண்டர், நடைமேடை விரிவாக்கம், ஸ்டேஷன் கோடு Cnv க்கு பதிலாக Knv யாக மாற்றுதல், சேரன் எக்ஸ்பிரஸ் பொள்ளாச்சி வரை நீட்டிப்பு தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை பொது மேலாளரிடம் வழங்கினார்.